# முடிந்த நிலையில் மிருகத்தனம்!

## அதிகார அழிவு ஆத்திரத்தில் முடிவு!

### ஏமாற்றம்-பதவி மோகம் பார்வையைப் பழுதாக்குகின்றன

### நாடக ராஜபார்ட் கனவிலும் ராஜரீகம் செய்வது இயல்புதானே!


Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 | சென்னை (11—10—49) வெளியீடு (12—10—49) | இதழ் 62


—————(0)—————

## சிறுநரி சியாங்கின் சீற்றம்!

"கைது செய்யுங்கள்! கை கால்களிலே விலங்கிட்டு வாருங்கள்! கட்டிக்கொண்டு இழுத்து வாருங்கள்! நன்றி கெட்ட நாய்கள்! நல்ல பாடம் கற்பிக்கிறேன் அந்த நாடோடிகளுக்கு!"

"நான் காவலன் என்பதை இதுகள் அறியச் செய்கிறேன்! என் மணி முடியை இதுகள் பறிக்க முயல்வதா? அது கண்டு நான் சகித்து இருப்பதா?"

"அந்தஸ்து-ஆளும் - அதிகாரம்-வேண்டுமாமே இந்த அன்னக்காவடிகளுக்கு! என்ன அக்கிரமம்? என்னத் துணிவு இந்த ஈன ஜந்துக்களுக்கு?"

"அரசமைத்துவிட்டார்களாம் அரசு! ஏற்கவேண்டுமாம், இவர்கள் அரசை இந்த உலகம்! பார்க்கிறேன் ஒரு கை இந்தப் பாப அரசை! பாழாக்குகிறேன் இந்தப் பாபிகளின் மனக்கோட்டையை!"

"மாசோ துங்காம்! மக்களாட்சி முறைகண்டவனும்! மூர்க்கன்! முன்னோர் வழியை உதறித் தள்ளிய உலுத்தன! இவன ஊராள்வது, அதைநான்பாாத்து மகிழ்வது! நான் ஒருவன் இருக்கும்வரை, அவன்நிமமதிபெறுவதேது?"

"சண்டாளி! நயவஞ்சகி! நன்றி கெட்ட துரோகி! என் உப்பையே தின்றுவிட்டு, எனக்கே கேடு சூழ்ந்தக் கொடுங்காலி! என் துணைவியின் உடன் தோன்றல் என்ற நினைப்பும் அவளுக்கு இல்லாமல் போயிறறே! அன்றே, அவளை நான் கொன்றிருக்க வேண்டும்! கருணை காட்டினேன்! சிறையிலடைப்பதோடு நின்று விட்டேன்! இரத்தபாசத்தைப் பெரிதெனக் கொண்டேன்! அவளுக்கு இருந்ததா அந்த இரததபாசம்?"

"அவளும், புதிய அரசிலே ஒரு தலைவியாம்! அவளுக்கு ஒரு புது அந்தஸ்து? அடுககுமா இந்த அநீதி? அவள் அதிகாரத்தில் இருபபது, நான் அதைக் கண்டு அகமகிழ்வது? வளரவிடுவேனா இந்த நிலையை?"

"பழிக்குப் பழிவாங்க முந்துவார்களே! என் முடியைப் பறித்துக்கொள்வதோடு திருப்தி கொளளார்களே! என் தலைக்கு மல்லவோ கொள்ளி வைக்க வேலை செய்வார்கள்! துன்மார்க்கர்கள்! நாசகாலாகள்!"

இப்படி அங்கலாய்க்கிறார், அரசியல் பூகம துளியும் தனக்கு இல்லை என்பதைக் காட்டிக் கொள்ளுகிறார், சீன சர்வாதிகாரி சியாங்-கே-ஷேக்!

தினம் தினம், தோல்வி, சிறுகச் சிறுக நாடு பறிபோகிறது. முன்னாள் கூட்டுத் தோழர்கள் கொடும் விரோதிகளாக மாறி வருகிறார்கள், அந்தஸ்து போனாலும் ஆவி நிலைத்தால போதும் என்ற நிலை ஏறபட்டு இருக்கிறது, அமெரிக்காவின் ஆயுத உதவி நிறுத்தப்படுகிறது. சொந்த இராணுவத்திலே கலகலப்பும் சலசலப்பும் நிகழ்நத வண்ணம் இருக்கின்றன, மக்கள் வெறுப்பு வளருகிறது, இந்த அந்தஸ்துப் பறிக்கும் படலத்தைக் காண்கிறார் சியாங், கலக்கமடைகிறார்!

முன்னாள் நிலையை நினைத்துப் பார்க்கிறார், சீன மக்கள் தம்மைப் புகழ்ந்து கூறிய புகழுரைகள் தம் காதுகளில் ஒலிக்கிறது, அந்த நாள் கிடைத்த வரவேறபுகளும் உபசாரங்களும் தம் கண்களுக்குத் தெரிகின்றன, வெளிநாடுகளிலேதமக்கிருந்தமதிபபை நினைக்கிறா, அமெரிக்கா அன்று செயது வந்த உதவியையும் உணருகிறார், இவ்வளவுடனும் தம இன்றைய நிலையை ஒத்திட்டுப பார்க்கிறார். பதை பதைக்கிறார்; கோபம் கொள்ளுகிறார் சியாங்!

அன்று இமயத்தில் இடம்— இன்று ஆழ்கடலில் இடம்! அன்று புகழ்—இன்று பழி! அன்று சீனத்தின் தனித் தலைவன்—இன்று சிறு கூட்டத்தில் ஒருவன்! அன்று சர்வாதிகாரி- இன்று ஜன விரோதி! அன்று சந்தோஷம்—இன்று சஞ்சலம்! அன்று பிறர் தலைவாங்கும் அதிகாரம்—இன்று தலை தபப மறைவிடம் தேடும் அவலம்! சியாங்கின் வாழ்விலே நிகழ்ந்த-நிகழும் இரு காட்சிகள் இவை. நம் கண் முன்னால் கண்ட-கண்டு வரும், படிப்பினை தரும்-காட்சிகள.

முன்னாள், ஒரு உத்திரவை, மாசேதுங் பிறப்பித்திருந்தார். சீன மக்கள் விரோதி சியாங்-கே-ஷேக் தம்பதிகளையும், அவர்களுடன் சேர்ந்த மற்றவர்களையும கைது செய்யுங்கள் என்று! இந்தஉத்தரவு பிறபபிக்கபபட்ட காலத்தில், சியாங்கின் அதிகாரத்தில் அஸ்தமன சூரியன் காட்சியளிக்கத் தோன்றுத நிலை! எனவே, அந்த உத்திரவுபறறி, அலட்சியமாகத்தான் இருந்து இருப்பார் சியாங் என்று எவரும் யூகிக்கஇடமுண்டு. இன்று, அவ்வாறு யூகிகக இடமில்லை. சூழ்நிலையில் தலைகீழ் மாறறம

[தொடர்ச்சி 3-ம பக்கம பார்க்க]

## அரசாங்க வரம்பை மீறும் கல்வி அமைச்சர்

### மதச்சார்பற்ற அரசாங்கத்தில் மதக்கல்வி வேண்டுகிறார் மந்திரியார்!

சென்னை மாநில ஆட்சிபபீடத் தமர்ந்துள்ள அமைசசாகளுள் கல்வி அமைசசராக இருபபவருடைய போக்கு ஒரு தனி மகத்துவம் வாய்நததாக இருக்கிறது. அவர் ஒரு நல்ல பழுத்த சனாதன தாமவாதியின போக்கில் தம் இலாக்காவை நடத்த வேலை செய்கிறா என்பது அவருடைய பேச்சுகளிலிருந்து விளங்கக் கிடக்கிறது. மேலும் நாட்டு மொழியான தமிழ் விஷயத்தில் அவா காட்டும் அக்கரை மாற்றாந் தாய் அன்பு போலவிருக்கிறது அவருடைய ஆாவமெல்லாம் சமஸ்கிருதம பாவ வேண்டும் வளர வேண்டும, இந்து மதம் பாவ வேண்டும் வளர வேண்டும் என்பதாகவே இருக்கிறதென்பது அவருடைய போக்கிலிருந்து நன்கு தெரிகிறது

சமஸ்கிருதம்வளருவதையோ, இந்து மதம் வளருவதையோ அவா விரும்பினால், அதை அவர் தம் சொந்தச் செலவில், தம் சொந்த ஒதாவில் செய்து கொண்டு போகலாம். அதறகாக, பொதுமக்கள் பணத்திலிருந்து சம்பளம் பெறும் அமைச்சா பதவியையும், அதிகாரத்தையும் பயன்படுத்துவது பெருந்தவறாகும். பல மதங்களையும் பெருமபான்மை மக்கள் தாய்மொழியாகத் தமிழ்மொழியையும் கொண்டுள்ள இந்த நாட்டிலே இவவாறு மிகமிகச் சிறுபான்மையோா விரும்பும் பேசவாாத, வழக்கற்று வீழ்ந்துபோன ஒரு மொழியைப் பறறிப் பிரசாரம் செய்துகொண்டு திரிவதும், கலவி நிலயங்களில் மதக்கல்வி கறபிபபதை வலியுறுத்துவதுமாகத்திரிவது நம்பிக்கைத் துரோகச்செயலாகுமென்றே கருதுகிறோம்.

நாட்டிலே பல மதங்களிருப்பதால்தான் மத்திய அரசாங்கம் மதக் கல்வியை வறபுறுத்தாமல ஆட்சியே மதசசாாபறற ஆட்சிதான் என்று அறிவித்திருக்கிறது. அப்படியிருக்க, நம மாகாணக் கல்வியமைச்சர் மதக்கல்வி போதிக்குமாறு தூண்டுவதும், சமஸ்கிருதம் படிக்கத் தூண்டுவதும் ஏன்? மக்களனைவரும் தாய்மொழிக் கல்வி படித்தாகி விட்டாாகளா? அதற்கு வழி செய்யக் கல்வி மந்திரியால் முடிந்ததா? செய்ய வேண்டிய வேலையைச் செய்ய முடியாமலிருக்கையில், கல்வியை 100-க்கு 100 பேர் அடையுமாறு செய்யும் வேலையைக் கவனிக்க ஏற்பாடு செய்யாமல், இந்த வெட்டி வேலையில் கலவி மந்திரி ஈடுபட்டுத் திரிவானேன்? இவறறில் வீணாக்கப்படும் காலமும் முயறசியும் பொதுமக்களுடைய பணம்பாழாவதைத்தானே காட்டுகிறது! கல்வி மந்திரியின் போக்கை, முதலமைச்சர் கவனித்து ஒழுங்குபடுத்த முன் வருவாரா?

அண்மையில் கலவி மநதிரி திருத்துறைபபூண்டி, மன்னாகுடி முதலியவிடங்களில் சுறறிவிட்டுத் தஞ்சை வந்தபோது, அங்கு ஒரு பள்ளியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு முக்கியமாக மதக் கல்வி புகட்டுவதைப் பாராட்டியுள்ளார். இதனால் மதக்கல்வி புகட்டினால் தான் கல்வி இலக்காவின் தயவு பெற முடியும் என்று பிற நிலயங்களும் இவ் வேலையிலிறங்கலாம்.

இது அரசாங்கத்தின் போக்குக்கு எதிரியான வேலை. இதனைச் சென்னை முதலமைச்சர் உடனடியாகக் கவனித்து எல்லா மதக்காரர்களும் சேர்ந்த பொதுமக்களின் பணத்தைச் சம்பளமாகப் பெறும் வரையிலேனும் அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் இவ்வாறு தங்களுக்குத் தனிப்பட்ட முறையில விருப்பமான மொழி- மதம் முதலாகிய வறறைப்பறறிய பிரசாரம் செய்வதை நிறுத்துமாறு வேண்டுகிறோம்.

## அரசாங்கம் தேர்தலில் தலையிடவில்லையாம்!

—————(0)—————

### வேலிக்கு ஓணான் சாட்சி

சோஷலிசக் கட்சித் தலைவரான தோழர் ஜெயப்பிரகாச நாராயணர் பெஙகளூரில தம் கட்சியின் பொதுசசபைக் கூட்டம கூட்டிப் பேசுகையில், சென்னை மாநிலத்திலும் ஐ. மா. விலும தம கட்சி வலுப்பெறுமையாலேயே தேர்தலில் தோல்வி ஏறபட்டதென்பதை ஒப்புககொணடார். ஆனால், அதே சமயத்தில் தமக்குத் தெரியாத மறறொரு செய்தியையும கூறினர். சென்னையில் நடந்த தேர்தலில் சோசலிஸ்டுகள் மூக்குடைபட்டனா; காஙகிரஸ் கடசியினருக்கு எதிராக வேறு எந்தக் கட்சியினரும போட்டி போடவில்லை. தனியே சுயேச்சையாகச சிலவிடஙகளில், காஙகிரஸை எதிர்ததுச் சிலர் போட்டியிட்டனர்.

இவ்வகையில் எதிர்கட்சி எதுவும போட்டியிடாமல் இருந்த நிலையில் நடந்த தேர்தலில் கூடக் காஙகிரஸ்காரர்கள் பெருவாரியாக வரமுடியாமல் தோற்றனர். இவ்வாறு தோல்வி நேரிடலாம என்பதை நன்கறிந்திருந்த காஙகிரஸ் மந்திரிகள் ஊர்ஊராகச சென்று காஙகிரஸ் அபேட்சகர்களுக்கே ஆதரவளிக்குமாறு வேண்டிககொண்டார்கள். ஆனால், அரசாஙகம் தேர்தலில் தலையிடவில்லையென்று அரசாஙகத்துக்கு இச்சகம் பேசிச சப்பைக்கட்டுக் கட்டுகிறார் தோழர் ஜெயபபிரகாசர்.

தோழர் ஜெயப்பிரகாசர் சோஷலிசககட்சிப் போர்வையில் காஙகிரசை ஆதரித்துவரும் பெரும் சோசலிஸ்ட் என்பது, காஙகிரஸ ஆட்சியின் போக்குக்குச் சப்பைக் கட்டுகட்டிச சான்று பகர்ந்துள்ளதிலிருந்து தெரிகிறது.

அரசாஙகத் தலையீடு என்றால், யாரும் காஙகிரஸைத் தவிர மற்ற எவருக்கும ஓட்டு போடக்கூடாதென்று கட்டளை பிறப்பிப்பது ஒன்றுதான் என்று தோழர் கருதுகிறார் போலும் ஆட்சி நடத்தும அமைசசர்கள் தேர்தல் பிரசாரம் செய்வது அரசாஙகத் தலையீடு அல்லபோலும தோழரின் அகராதிப்படி! எப்படியாவது காஙகிரஸின் செல்வாக்கு நாட்டு மக்களிடையே நாளுக்குநாள் குறைந்து வருவதைச சரிப்படுத்த, சோசலிஸ்ட்போர்வையிலாவது காஙகிரஸ் கட்சியை வலுப்படுத்த தோழர் ஜெயப்பிரகாசர் எடுத்துக்கொண்டுள்ள முயறசி, உண்மையை நன்கு அறியும் அளவுக்கு, அறிவு பெற்றுள்ள மக்களிடையே வெறறி பெறுமா என்பது ஐயத்திற்குரியதுதான்.

# மாலை மணி

சென்னை 11—10—49 செவ்வாய்க்கிழமை


# இரண்டு மொந்தை போடு!

"அவன் கிடக்கிறான் குடிகாரன், இங்கு போடு இரண்டு மொந்தை" என்று ஒரு குடிகாரன் மற்றொரு குடிகாரனைப் பார்த்துக் கூறுவது, என்று ஒரு முதுமொழி வழங்குவதைக் கண்டிருக்கலாம் பலரும். அத்தகைய முதுமொழிக்கு இலக்கியமாக இருந்து, காட்சியளிக்கும் 'பெருமை'யை, அரசியல் வட்டாரத்திலுள்ள சிலர் அடிக்கடி உண்டாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

மது அருந்தி, மனம் மயங்கி, தன்னிலை மறந்து, ஏதேதோ பிதற்றும் நிலையில் உள்ள ஒருவன், குடிகாரனாக இல்லாத ஒருவனைப் பார்த்து, "அவன் கிடக்கிறான் குடிகாரன், எனக்குப் போடு இரண்டு மொந்தை" என்று கேட்பதும் உண்டு. மது மயக்கம் பெற்றவனுக்கு, குடிமறுப்பவன் குடிகுடிப் போனாகவும், உண்மை விளம்புவோன பொய் பகர்பவனாகவும், நல்லவன கெட்டவனாகவும், நாட்டுக்குப் பாடுபடுபவன் துரோகியாகவும் காணப்படும். அத்தகைய கட்குடியர்களைப் போன்று, "தேசிய"த்தை மிதமிஞ்சிப் பருகிவிட்ட அரசியல 'மேதைகள்' சில அரசியல் உலகில் நடமாடி வருகின்றன. அந்த அளவுக்கு இந்த நாட்டின் அரசியல் உலகம் பாழ்படுத்தப்பட்டிருக்கிறது, மட்டரகங்களின் சேர்க்கையினால். அரசியலின் தரம் மிகமிகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

அளவுக்கு மீறினால் அமிழ்தும் நஞ்சாகும் என்பது போல், காங்கிரஸ் தயாரிக்கும "தேசிய" பானம், மிக்பருகிவிட நேர்ந்துவிட்டால்,மேலே சுட்டிக் காட்டப்பட்டது போன்ற குடிகாரனின் நிலைக்குக் கொண்டு வந்து விடப்பட்டு விடுகிறார்கள் பலர்-பரிதாபத்திற்குரியவர்கள்! சில சமயங்களிலே, அவர்கள் புரிந்து காட்டும் நடவடிக்கைகளைக்கொண்டு, கண்டிக்கப்பட வேண்டியவர்களாகி விடுகிறார்கள் பொதுமக்களால்.

இத்தகு காட்சிகளை நடத்திக் காட்டி, அவற்றிற்கோர் இலக்கியமாகத் தங்களை ஆக்கிக் கொள்வதிலே பொதுவாகக் காங்கிரஸ் தோழர்கள் கைதேர்ந்தவர்களாக ஆகிவிட்டார்கள். அதிலும் மந்திரிமார்களிலே சிலர் தேர்ச்சி அடைந்திருப்பது 'பாராட்டுதற்குரியது தான்!' அதிலும் மந்திரி மாதவமேனன் அடைந்திருக்கிற வளர்ச்சியிருக்கிறதே, அம்மம்ம, சொல்லி முடியாது!

மந்திரிமாதவனார், கல்வித் துறை வேலைகளிலே தம் கவனத்தைச்செலுத்துவதைவிட, சுற்றுப்பிரயாண திட்டத்திலே செலுத்தும் கவனம் இருக்கிறதே, அது வேறு எந்த நாட்டுக் கல்வி மந்திரிக்கும் இல்லாத அருந்திறன்களிலே ஒன்றாகும்! ஒரு திங்களில் முக்கால் பகுதி நாட்கள் அல்லவா, வெளியூர்ச் சுற்றுப் பிரயாணத்திலே கழிக்கிறார் கல்வி மந்திரியார்! இந்த அருந்திறமை ஆங்கிலநாட்டுக் கல்வி மந்திரிக்கு உண்டா, அமெரிக்க நாட்டு மந்திரிக்கு உண்டா! அவர்களுக்கெல்லாம் எப்படி வரும், அவர்களெல்லாம் மாதவனார் போல அவ்வளவு பெரிய தியாகிகளா, என்ன! 'மந்திரிக் கழகு சுற்றித்திரிதல்'—இந்தப் புது இலக்கியத்தையும் ஏற்படுத்திய பெருமை அனைத்தும் காங்கிரஸ் மந்திரிகளுக்கு உரித்ததாகும்!

செல்லுமிடங்களிலெல்லாம் மந்திரி மாதவரை ஏதாவது பேசும்படி கேட்டுக்கொள்கிறார்கள்; இவரும் ஏதாவது பேசவேண்டுமே என்று பேசுகின்றார். "தேசீயம்" எப்படி அவரைப் பேசாமல் இருக்கச் செய்யும்!

திருவையாற்றுத் தமிழ்—வடமொழி அரசர் கல்லூரியில், மந்திரி மாதவமேனனாரைப் பேசும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவரும் பேசியுள்ளார். எதைப் பேசினால்தான் என்ன, எப்படிப் பேசினால்தான் என்ன! அவர்தான் மந்திரியாயிற்றே! ஏதோ பேசவேண்டுமென்று பேசியதில் சிந்திய 'முத்துக்களை'க் காணுங்கள்.

"மாணவர்கள் அரசியலில் தலையிடாமலும், கம்யூனிஸ்ட், கறுப்புச்சட்டை, சோஷலிஸ்ட் கோஷ்டியினரின் கூற்றுக்குச் செவிசாய்க்காமலும் இருக்க வேண்டும்"

மாணவர்கள் அரசியலிலே தலையிடக்கூடாது என்று இப்பொழுது 'உபதேச காண்ட வியாக்யானம்' புரியத்தொடங்கியிருக்கும்மாதவமேனனும். அவர் சார்ந்திருக்கும் காங்கிரசும், 1921-ல் ஏன் இந்த உபதேசஞ் செய்யவில்லை? மாருக் பள்ளியைவிட்டு வெளியேறச் சொல்லி அரசியலில் கலக்கச்சொல்லினரே! அது ஏன்? 1931-ல் உப்புச் சத்தியாக்ரகம் நடந்தபோது ஏன் இந்த உபதேசம்புரியமறந்தனர்? 1936ல் தேர்தல் நடக்கும்போது எங்கே இந்த அறவுரை கூறும் 'அருந்திறம்' போயிற்று? 1942-ல் ஆகஸ்டுக் கிளர்ச்சிக் காலத்தில் மாணவர்களுக்கு இத்தெளிவுரையைக்கூற அவர்கள் மறந்துபோனதே? 1947-ஆகஸ்டு பதினைந்துக்கு முன், 'மாணவர்கள் அரசியலில் தலையிடக்கூடாது' என்ற இந்த அருமமொழி அவர்கள் வாயினின்றும் அரும்பாததேன்? அப்பொழுதெல்லாம் மாணவர்கள் கூட்டுறவுகிடைத்தது-தேவைப்பட்டது, ஆகவே மாணவர்களைத் தூண்டினர்; இப்பொழுது மாணவர்களின் கூட்டுறவு கிடைப்பதில்லை, எனவே "சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிக்காட்டி, மாணவர்களை அரசியலில் தலையிடாமற்செய்து, தமக்குக் கிடைக்காத ஆதரவு, மற்ற அரசியல் இயக்கத்தார்க்குக் கிடைக்கக்கூடாது என்ற நிலையை உண்டாக்கவே, இப்பொழுது உபதேசம் புரிகின்றனர் என்பதல்லாமல், வேறு நாணயமான காரணம் என்ன கூறமுடியும் இப்படிப்பட்ட அவர்களது செய்கைகளுக்கு!

நாம் அப்பொழுதும் கூறிவந்தோம், இப்பொழுதும் கூறிவருகிறோம் மாணவர்கள் அரசியலை அறிந்து கொள்ளுகின்ற நிலையில் இருக்க வேண்டுமேயொழிய, அரசியலில் நேரடியாகப்பங்குபெறுகின்ற நிலையில் இருக்கக்கூடாது என்று. மாணவர்கள் அரசியலை அறிந்துகொள்ளும் நிலையில மட்டிலும்தான் இருக்க வேண்டும் என்று நாம் கூறிய போது, மாணவர்கள் அரசியலில் தலையிட்டாகவேண்டும் என்று வற்புறுத்தியவர்கள், இந்தக் காங்கிரஸ்காரர்கள் தான், இந்தப் பரம்பரையில் வந்த மாதவமேனனார்தான், இப்பொழுது கூறுகிறார், மாணவர்கள் அரசியலில் தலையிடக்கூடாது என்று. எவ்வளவு அழகு!

மேலும் அவர் கூறும் அழகைப் பாருங்கள். கம்யூனிஸ்ட-கறுப்புச்சட்டை - சோஷலிஸ்டுக் கோஷ்டியாரின் கூற்றுக்கு செவிசாய்க்க வேண்டாம் என்கிறார். "தேசிய" வெறியினை மகிழ்ந்தேற்றுக் கொண்டிருக்கும் மாதவனார். "அவன்கிடக்கிறான் குடிகாரன், இங்கு போடு இரண்டு மொந்தை" என்று கூறுவதுபோல்,மற்ற கட்சியாரின் கூற்றுக்களுக்குச் செவிசாய்க்கக் கூடாது என்கிறார்ஆனால் காங்கிரசாரின் கூற்றுக்குச் செவிசாய்க்கலாமாம்! என்னே விந்தை! அதுவும் ஒரு கல்வி மந்திரி, சிந்தனைக்கு இடங்கொடுங்கள் என்று மாணவர்க்கும மற்றோர்க்கும் போதிக்க வேண்டிய கடப்பாடுடையவர், மற்றக் கட்சிக்காரர் பேச்சைக் கேட்காதீர்கள்,காங்கிரசார் பேச்சையே கேளுங்கள், என்று கூறுகிறார் என்றால், அவரைப்பற்றி-அவருடையநிலையைப்பற்றிஎன்ன எண்ணுவர் அறிவுடையோர்! நினைக்க வேதனை மிகுகிறதே!

'அனுமார்இராமனின் சொற்றிறத்தைப்' பாராட்டுவது போல, ஆச்சாரியாரின 'பொனமொழி' ஒன்றை எடுத்துக்காட்டி,விளக்கந்தரவைக்க எண்ணுகிறார் மந்திரி மாதவமேனனார். "விதை பெரிய மரமாக வளரவேண்டுமானால, கொஞ்சகாலம் பூமிக்குள்ளேயே இருந்துதான் ஆக வேண்டும். அப்படி யில்லாமல் விதை சிதறினால் கோஷ்டிகளாகிய கிளிகள, கொத்திச் சென்று, தங்களைப் பலப்படுத்த உதவும் கருவிகளாக்கிக்கொள்வார்கள்" என்று ஆச்சாரியார் கூறிய இதோபதேச மொழியை எடுத்து வைக்கிறார், 'பத்தினி'வேடம், புனைந்துள்ள கல்வி அமைச்சர். மந்திரியார், தாம் எந்தக் கோஷ்டியையும் சேராதவர் போலவும், நடுநிலையாளராகக் காட்சியளிப்பது போலவும், பேசுகிற முறையிருக்கிறதே அதுதான் விசித்திரமாக இருக்கிறது!

மற்றக் கட்சிக் கிளிகள், மாணவ விதைகளைக் கொத்தித் தின்னக்கூடாது,—காங்கிரஸ் கிளிமட்டும் எவ்வளவு வேண்டுமானாலும் கொத்தித்தின்னலாம போலும்! என்னே விந்தை! மற்றக் கட்சிக் கிளிகளிடத்திருந்து விதைகளைக்காப்பாற்றிவைக்க விரும்பும் கல்வி அமைச்சர், ஏன் காங்கிரஸ் கிளிக்கு மட்டும் விதிவிலக்கு அளித்து, அதற்குமுன்னிலையில் மாணவ விதைகளைத் தூவுகிறார்? தூவலாமா, சொல்லில் நேர்மையுண்டென்றால - எண்ணத்தில் பழுது இல்லை என்றால்?

காங்கிரஸ் அமைச்சர்களும், அவர்களைச் சார்ந்த ஏனையோரும், எந்தப் பள்ளியிலும், எந்தக் கலலூரியிலும், எந்தப் பல்கலைக் கழகத்திலும், எந்த அளவுக்கு வேண்டுமானாலும் அவர்கள் கட்சிக் கொள்கையைப்பரப்பலாம்-பரப்ப இடம் தாராளமாக அளிக்கப்படுகிறது—அதாவது காங்கிரஸ் கிளி, விதைகளை வேண்டிய மட்டும் தின்னுமாறு திறந்துவிடப்படுகிறது! மற்றக் கிளிகள் துரத்தி அடிக்கப்படுகின்றன! ஏன் இந்த அரசியல் ஓரவஞ்சம்! காந்தி பக்தர்களுக்கு இருக்கலாமா? இருக்கிறதே! அவர்கள் பயணம் பாசிச புரி நோக்கிச் செல்கிறது—என்செய்வது!

"எங்கும் 'ஓழிக' என்ற ஓசை ஒழிந்து, 'ஓங்குக' என்ற ஓசையே கேட்கவேண்டும்" என்று விரும்புகிறார் அமைச்சர். நாமும் அப்படித்தான் ஆவல்படுகிறோம். ஒழிக்க வேண்டியவைகள் பலவற்றைப் புதிது புதிதாக உற்பத்தியாக்கித்தரும் பணியினை, மந்திரிசபை ஏற்றுக்கொண்டிருக்கும்போது, 'ஒழிக' என்ற ஓசை எப்படி நீங்கும்; 'ஓங்குக' எப்படி வளரும்!

"அவன் கிடக்கிறான் குடிகாரன்," என்று பிறரைக் குற்றஞ்சாட்டிவிட்டுத், தன்னிலை மறந்து, "எனக்கு இரண்டு மொந்தை போடு" என்று கேட்கும் மனப்பான்மையும், அம் மனப்பான்வழி தோன்றும் செயல்களும் இருக்கும் போது, 'ஒழிக' எப்படி நீங்கும?

## உலகக்கூடம்

['சம்மட்டி']

'பரமன்'

### குடும்பத்தாலும்!

கொஞ்சம்கூட லௌகீகம் தெரிவதில்லை இந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு! எந்தக் கேள்வியைக் கேட்பது எதனைக் கேட்கக்கூடாது என்ற நினைப்பே நிருபர்களுக்கு இருப்பதில்லை! எப்படியாவது, ஒருவர் நெஞ்சத்தில் மறைந்து கிடக்கும் எண்ணங்களையும், உருவாகாத முடிவுகளையும், அம்பலப்படுத்துவதில் அசகாய சூரர்களாக இருக்கிறார்களப்பா இந்த நிருபர்கள் கூட்டம்! அரசியல்வாதிகள், அதிகாரத்தில் இருப்பவர்கள், மார்புக்கு நேரே நீட்டப்படும் துப்பாக்கி முனைகளுக்கு முன் நின்றாலும் நிற்கலாம், பத்திரிகை நிருபர்கள் விடு கேள்வி சரங்களுக்கு முன் நிற்பது என்பது முடியாத காரியக் தானப்பா!

பாருங்கள்; ஏதோ நேரு, இந்திய ஏழை மக்களின் சுக வாழ்வு கருதி அமெரிக்கா செல்லுகிறபொழுது, கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக, இங்கிலாந்திற்குச் சென்று, மவுண்ட்பேட்டன் மாளிகையில் தங்குவதற்குப் போனார்! மற்ற நாட்டுப் பிரதமர்களுக்கு இல்லாத அளவிற்கு, நமது பிரதமருக்கு அதிக வேலைத் தொல்லைகள் இருக்கிறதென்பது, இங்கிலாந்திலுள்ள நிருபர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது? இந்தியாவில் உழைத்து உழைத்துத்தான் அலுத்துப்போய், சிரம பரிகாரம் செய்துகொள்வதற்காக நம்வீடு தேடி வந்திருப்பவரைச், சந்நிக் கிழுக்காமல், சாந்திபெற விடுவோம் என்ற பெருந்தன்மை எள்ளத்தனையும் இல்லையே இங்கிலாந்து நிருபர்களுக்கு!

கேள்விதான் கேட்கிறார்களே, அமெரிக்கா ஸ்தானிகருக்கு அமெரிக்கச்சூழ்நிலைபிடிக்கிறதா, கிருஷ்ண ஹாத்திசிங்கை எப்பொழுது இந்தியத் தூதுவராக ஆக்கப்போகிறீர்கள், இந்திரா நேருக்கு சொல்லாற்றல் கிடையாதா, சந்திரலேகா பண்டிட்டுக்கு தேசப் பணிபுரிய வாய்ப் பளிக்கப்பட்டிருக்கிறதா, ரீட்டா பண்டிட்டுக்கு ஏதாவது ஒரு கமிஷனின் தலைவியாக இருப்பதற்குத் தகுதி இருக்காதா, பட்டேல்ஜீயுக்கு உடம்பு சுகந்தானா, இராஜேந்திரபிரசாத்துக்கு காசநோய் குணந்தானா, காந்தியாரின் ஆத்மசக்தி உயர்ந்ததுதானே, என்பனபோன்ற கேள்விகளைக் கேட்டாலாவது, பதில் கூறுவதற்கு அவ்வளவு கஷ்டம் இருக்காது! உடனுக்குடன் தேங்காய் உடைத்தது போல திட்டவட்டமாக பதில் கூறி இருப்பார் பண்டிதர்!

இப்பொழுதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. நமது பண்டிதரையா இந்த நிருபர்கள் மடக்கிவிட முடியும்? பண்டிதர் எங்கே, இந்தப் பத்திரிகை நிருபர்கள் எங்கே! அவருடைய படிப்பிலே, இவர்களுக்கு பத்தாயிரத்தில் ஒருபங்காவது இருக்கிறதா? இவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில சொல்லமுடியாமல் திக்கு முக்காடுபவரா பண்டிதர்?

"இந்தியாவின் நிலை எப்படி இருக்கிறது?" நிருபர்கள்.

"ரொம்ப ரொம்பநல்ல நிலை!" பண்டிதர்.

"ஒவ்வொருவரும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்களா இந்தியாவில்?" நிருபர்கள்.

"இல்லை! வேறு எங்காவது ஒவ்வொருவரும் சந்தோஷத்தோடு இருக்கிறார்களா?" பண்டிதர்.

எந்த நாட்டிலும், எல்லோரும், எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பார்கள் என்று சொல்வது முடியாது! மந்திரி சபையினர் வாழ்க்கையின் தாக்குதல்இல்லாமல், சந்தோஷமாக இருப்பார்கள் எந்த நாட்டிலும்! சட்ட சபை உறுப்பினர்களிடமும் மகிழ்ச்சி பொங்கும்! பெரிய பெரிய அதிகாரிகள் இல்

## ஆண்டவன் காப்பாற்றப்பட்டார்!

மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களைப் போக்குவதில் காட்டும் அக்கரையைவிட, ஆண்டவனுக்கு ஏற்படும் சங்கடங்களைத் தீர்த்து வைப்பதில் காங்கிரஸ் அரசாங்கங்கள் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகின்றன.

மத்திய மாகாண சர்க்கார் இந்து ஆண்டவர்களுக்கு ஏற்பட்டுள்ள சில தொல்லைகளை நீக்கத் தீவிர முயற்சி எடுத்துள்ளார்கள் பிச்சைக்காரர்களின் தொல்லைகளினின்றும் ஆண்டவனைக் காப்பாற்றவும், வேறு மதக்காரர்கள் 'திருட்டுத் தனமாக இந்து மதக் கோவில்களில் நுழைந்து அநியாயமான முறையில இந்துக் கடவுள்களின் 'வரங்களை'ப் பெற்றுக்கொண்டு சென்றுவிடாமல் தடுக்கவும், பிறப்பு—இறப்பு இவை காரணமாகத் தீட்டுடையோர் ஆண்டவனுக்குத் 'தீட்டை' ஒட்டிவிடாமல் தடுப்பதற்காகவும், மத்திய மாகாண சர்க்கார் பிச்சை எடுக்கும் தொழிலுடையோர், பிற மதக்காரர்கள், பிறப்பு — இறப்பின் காரணமாகத் தீட்டுப்பட்டோர் ஆகியோர் கோவில்களில் நுழையக்கூடாது என்று சட்டம்செய்துள்ளார்கள். இவ்விதிகளை மீறுவோர் கடுமையாகக் கோவில்களினின்றும் அப்புறப் படுத்தப் படுவார்கள் என்றும் அச்சட்டம் கூறுகிறது. ஆண்டவன் ஆபத்துகளினின்றும் எப்படியோ காப்பாற்றப்பட்டு விட்டார்! இனியொரு கவலையும்இல்லை, பராபரமே!

---

லங்களிலும் சந்தோஷம் நர்த்தனம் புரியும்! ஆலை ஊரார்கள்—பண மூட்டைகள்—கோயில் பெருச்சாளிகள் — அனைவர முகத்திலும் மனத்திலும் மகிழ்ச்சித் தாண்டவம் புரிந்த வண்ணம் இருக்கும்!

பாட்டாளி வீட்டிலே அழுகுரல்தான் இருக்கும்! ஏழையின் முகத்திலே ஏக்கந்தான் குடி புகுந்து இருக்கும்! ஏதோ, ஒருவரா இருவரா சந்தோஷத்தைப் பங்கிட்டுத் தருவதற்கு? முப்பத்தி மூன்று கோடி பேருக்கு சந்தோஷத்தைத் தந்து உதவுவதென்பது, 'பரமன்' குடும்பத்தாலேயே முடியாதென்றால், பண்டிதர் குழுவினரால் மட்டும் தர முடியுமா? முடியாதைய்யா முடியாது! இந்தியாவில் எல்லோரும் சந்தோஷமாக 'இல்லை' என்று பண்டிதர் ஜவஹர் ஒளிவு மறைவு இல்லாமல் கூறினதை. துளியும் மறுக்காமல் கண்ணியமாக வரவேற்கிறார் 'சம்மட்டி'யார்! உங்கள் நிலையும் அதுதானே! சபாஷ்!

* * *

"நாற்காலியைப் பிடித்துக் கொண்டு என்னடா பண்றே?"

"ஒண்ணுமில்லே சார்!"

"எப்பப் பார்த்தாலும் நாற்காலியைக் கட்டிகிட்டு கிடக்கிற! கேட்டால் ஒண்ணுமில்லே சார என்கிறே?"

"பார்க்க வருகிறவங்க சீக்கிரம்போகிறதில்லெண்ணு அடிக்கடி சொல்லிக்கிட்டு இருக்கிறீங்களே, அதுக்காக ஒருவழி செய்யறனுங்க—சார்"

"அதுக்குநாற்காலியேபிடிச்சுகிட்டு என்னடா வழி செய்யற?"

"அதுங்களா! தெனந்தெனம் ஒரு மூட்டப்பூச்சா கொண்டாந்து, நாற்காலியிலே விட்டுக்கிட்டு இருக்கிறெனுங்க—சார்!"

"போடா முட்டாளே! அந்த நாற்காலியோடு நின்று விடாதேடா அந்த மூட்டைப் பூச்சிகள்! அமெரிக்காமாதிரி, கொஞ்ச நாளைக்கெல்லாம் வீடு பூராவும் குடியேறிவிடுமேடா 'முண்டம்!'"

## பாம்பைப் பழுதெனக் காட்டும் மனப்பான்மை

## தமிழில் இல்லாத ஆர்வம் வடமொழியில் காட்டப்படுவதேன்?

நாட்டிலே மக்களுக்கு உயிர்நாடி போன்றுள்ள பிரச்சினைகள் பல தீர்க்கப்பட முடியாமல் கிடக்கின்றன.

மந்திரிகள் மனம்போன போக்கில் பேசித் திரிகின்றனரெனினும் ஒருவருடைய பேச்சாவது நடைமுறைக்கு வருவதாகத் தெரியவில்லை.

விலைவாசிகள் உயரமாட்டா, மக்கள் வாழ்க்கைக் கஷ்டங்கள் ஒழிந்தன என்றார் இந்தியாவின் முதலமைச்சர். அவர் சொல்லி வாய் மூடுமுன் விலைகள் இரட்டிப்பாக உயர்ந்தன. வாழ்க்கைக் கஷ்டங்கள் வளர்ந்தன. நிலைமையை ஒழுங்கு படுத்தும் வகையை, அந்த, மந்திரிகள் அறிய முடியவில்லை.

துணிப்பஞ்சம் பெருகியது. வாங்கியணிய முடியாத விபரீத விலைகளில் துணிகள் விற்கப்படுகின்றன. ஏழைகளால் வாங்க முடியவில்லை.

கைத்தறியில் துணிகளை செய்பவர்களுக்கு, துணிகள் மிகுதியாக விற்பனையான காலத்தில் செய்வதற்கு நூல் கிடைக்கவில்லை. இப்போது நூல் ஏராளமாகக் கிடைக்கிறது. துணி செய்வதால் வாங்குவாரில்லை.

கல்வியோ, ஏழை மக்கள் பெறுமாறில்லை. பல்கலைக்கழகக் கல்வி என்பது, வைக்கோற்கட்டின் மீது நாய் அமர்ந்துள்ளது போன்று. அனைவருக்கும் தாராளமாகப் பயன் படுவதை விட்டுப்பணம் படைத்தோருக்கு மட்டும் பயன் படுவதாக இருக்கிறது.

கல்வி நிலயங்கள் இந்த நாட்டில் இன்று வர்த்தக நிலயங்கள் போலாக்கப்பட்டு, ஏழை மாணவர்கள் சம்பளம் கட்டிப்படிக்க முடியாத அளவில் கட்டண விகிதம் உயர்ந்து விட்டது.

தமிழ் நாட்டிலே, தமிழ் மொழியை எழுதப்படிக்கத் தெரிந்துள்ளவர்கள் 100—க்கு 12 பேரே இருக்கின்றனர். 88 சதவிகித மக்கள் இன்னும் கல்வி வாசனையே அற்றவராயிருக்கின்றனர்.

நாட்டின் நிலை இவ்வாறு இருக்கையில், திடீரென ஓர் இனத்தாருக்குச் சென்னையில் சமஸ்கிருத மோகம் தலையுச்சிக்கேறி விட்டிருக்கிறது. கடந்த சில நாட்களாகச் சமஸ்கிருதக் கூச்சல் பெரிதாகிவிட்டது.

உண்மையில் சமஸ்கிருதம் செத்துச்சீரழிந்தமொழி;வழக்கொழிந்த மொழி; வளமில்லா மொழி; உயிர் வாழ வகையற்றுப்போன மொழி; இலக்கணவரம்பிலா மொழி. பரந்த நோக்கம், விரிந்த கருத்தில்லா இலக்கியங்கள் கொண்ட மொழி; தமிழ் நாட்டில் பல ஒழுக்கக் கேடுகளுக்கும், மக்களிடை உயர்வுதாழ்வுகள் ஏற்பட்டமைக்கும், சாதிப் பெருக்கத்திற்கும், மக்கள் மனம் மடைமையில் அழுந்தியதற்கும் மூலகாரணமாக இருக்கும் மொழி.

இத்தகைய சமஸ்கிருதத்தைப் பரப்ப ஒரு கூட்டத்தார் கச்சை வரிந்து கட்டிக்கொண்டு முனைந்து நிற்கின்றனர். மதமாய்கையில் மூழ்கிப் போன பழங்காலப் பித்தர்கள் சிலர் சமஸ்கிருதத்துக் கெனக் கட்டிவைத்த பள்ளிகள் போதாவென்று, அதற்கெனத் தனிப் பல்கலைக் கழகம் ஒன்று தென்னிந்தியாவில் ஏற்படுத்தவேண்டுமென்று அண்ணாமலை நகர் சமஸ்கிருதக் கழகம் யோசனை கூறுகிறது. நீதிபதி பதவி வகிக்கும் தோழர் ஒருவர் மூன்று மொழிகள் என்ன மாணவர்கள்சமஸ்கிருதமும் சேர்த்து நான்கு மொழிகளைக் கட்டாயம் படிக்க வேண்டுமென்கிறார். அனுபவப் பூர்வமாக இளமை உள்ளவர்களின் நிலையை உணர முடியாக் குறையினால்.

எனவேநாட்டிலேமீண்டும்மூடத்தனத்தைப் பரப்பி, அறியாமைச் சேற்றினின்றும் மக்கள் மீள முடியாதபடி தடுத்துவைக்கவே, சமஸ்கிருதத்தைப் பரப்பும் வேலையில் ஒரு தனிக்கூட்டத்தார் இறங்கியுள்ளனர். இந்தச் சமஸ்கிருத மோகிகள் தமிழைப் பிழையறப்பேச எழுதப் பயின்றுள்ளார்களா என்றால் அது ஐயப்பாட்டிலிருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழைப் பிழையற எழுதமுடியாதவர்கள் சமஸ்கிருதப்பரப்பு வேலையில் இறங்குவதன் மர்மம் என்ன? தமிழைப் பரப்ப, படிக்காத பல்லாயிர மக்களிடையே கல்வியைப் பரப்ப முயலாமல், சமஸ்கிருதத்தைப் பரப்புவானேன்? நாட்டில் பலவகைக் கஷ்டங்கள் மக்களை வாட்டி வதைக்க, அவற்றைப்போக்க வழி தேடாமல், செத்துப் போன ஒரு மொழியை உயிராக்க முயல்வானேன்? தமிழ் நாட்டு மக்கள் எவராவது தங்கள் தாய் மொழியை விட்டு வேறு ஏதோ ஒருமொழியை அதுவும் வழக்கொழிந்தமொழியை இவ்வாறு பரப்ப முடியுமா? பரப்ப மனந்தான் வருமா? பரப்பப் பிற முயன்றாலும் படிக்கத்தான் முனைவார்களா? படித்தாலும் பலன் தான் உண்டா? எனவே, தமிழர்கள் இத்தகைய திடீர்ச் சமஸ்கிருத மோகிகளின் பிரசார வேலை கண்டு எச்சரிக்கையுடனிருப்பதுடன், நாட்டிலே தமிழைப் பரப்பவும், கல்வி யில்லா மக்களிடைக் கல்வியைப் பரப்பவும் முயல வேண்டுகிறோம்.

## பொதுக்குழு

கீழ்க்கண்ட தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள்:—

(1) எஸ் வி. லிங்கம—சென்னை, (2) குமார தணிகாசலம்-கள்ளக்குறிச்சி, (3) எஸ். நடராசன—தூத்துக்குடி, (4) எம். ரத்தினம—தூத்துக்குடி, (5) கே. தாளமுத்து—தூத்துக்குடி, (6) ஆ தி. தியாகராசன — தூத்துக்குடி, (7) பத்மன். செல்லப்பன்—சென்னை, (8) ஏ. சாவித்திரி-இராசாமடம். (9) இராம பழனிசாமி—பனையபுரம். (10) ஆர். குட்டி — ஆரணி, (11) வி. எம. ஜி. கருணாநிதி-தஞ்சை (12) ஏ. சின்னசாமி-ஜமீன் ஆலமரத்துப்பட்டி. (13) இரா. சத்துரு சங்காரவேல்—பொரையார், (14) பூபால—திண்டிவனம்

பிரசாரக் குழுவில் சேலம் தோழர் ஏ. சித்தையன் அவர்களும், குடந்தைத் தோழர் எஸ். கே. சாமி அவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.

## முடிந்த நிலையில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்பட்டு விட்டிருக்கிறது முன்னர், கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தபோது மாசேதுங் வெளியிட்ட உத்திரவுக்கு. இன்றைய நிலையில், ஆட்சிப் பீடத்தில் மாசேதுங் அமர்ந்திருக்கிற காரணத்தால், புதுப்பொருள், பயங்கரமான பொருள்தான் இருக்கமுடியும். இதனை, முன் நினைத்திருந்தது போல், அலட்சியமாகக் கருதி விட முடியாது சியாங்-கே-ஷேக்கால்!

இருக்கும் நிலைமைக்கேற்ப, தனக்குக் காத்துக்கொண்டு இருக்கும் ஆபத்தான எதிர்காலத்தை நினைத்துக்கொள்ளுகிறார, ஆயிரம் தேள் கொட்டின மனத்தைப் பெற்றுவிடுகிறார் சீன சர்வாதிகாரி சியாங்! சோகம், கோபம் சேர்ந்து கொள்ளுகிறது! சிந்திக்கும் பண்பு அவரிடமிருந்துச் செலவு பெற்றுக்கொள்கிறது! முடிந்த கட்டத்திலும்,-முடிவைத் தெரிந்திருந்தபோதிலும் — மிருகமாகிறார்! சர்வாதிகாரப் பண்புக்குப் பொருத்தமான பேர் அதுதான்!

தலை தப்பிப்பிழைக்கத் தக்க முனனேற்பாடுகளைச் செய்வதை மறந்துவிட்டு, அரசியல்துறவு பூண்டு அமைதியாக எஞ்சிய காலத்தை நடத்த திட்டமிடுவதை விட்டுவிட்டு, இன்னும் இழந்த அந்தஸ்தைக் காட்டிக்கொள்ள, மூர்க்கத்தனமாக நடந்துவருகிறார் சியாங்!

சியாங் கட்டளை இடுகிறார். கைது செய்யுங்கள் மாசேதுங்கையும், மதாம் சன்—யாட்—சென்னையும், ஷூ-யென்-லையையும் உள்ளடக்கிய 86 கம்யூனிஸ்டுகளை என்று!

மதாம் சன்—யாட்—சென், சீனகுடியாட்சியின் ஸ்தாபகரும் சியாங்-கே-ஷேக்கின் அரசியல ஆசிரியருமான டாக்டர சன்-யாட்-சென் அவர்களின் துணைவி. ஆசிரியரின் துணைவியை, அந்தக் காலத்திலேயே சிறையிலிட்டு மகிழ்ந்த மகாநுபாவர், இன்று கைது செய்யுங்கள் என்று உத்திரவிடுவதிலே ஆச்சரியமில்லை! மதாம் சன்-யாட்-சென், தன் துணைவியின் உடன் பிறந்தவர் என்ற எண்ணத்தைக் கூட மறந்து விட்டார் சியாங்! கைது செய்து மகிழப் பார்க்கிறார்! இவ்வளவும் ஈட்டமா? இந்த உலகத்தில் இல்லை!

ஒரு காலத்தில் சியாங் பெற்றிருந்த அந்தஸ்து இன்று சீனமக்களால் தட்டிப் பறிக்கப்பட்டு விடவும், அதன பலனாக உயிருக்கு ஊசலாடும் நிலை சியாங்கிற்கு ஏற்படவும், இது கண்டு ஏமாற்றம் அடைந்துவிட்ட சியாங், எரிவுள்ளத்தோடு பிதற்றுகிறார் பலப் பல! மனச்சாந்திக்கமன்றுடுகிறார முன்னாள் சீன சர்வாதிகாரி! அவருடைய மன அமைதி கெட்டு எவ்வளவோ காலமாகிறது! தன துமனச்சாந்தியைத் தொலைத்துக்கொண்டவரும் அவரேதான்! மக்களை மதிக்க மறுத்த, சியாங்கின் மமதைதான், இந்த விளைவுக்கான முழு காரணம்! யார் தான் என்ன செய்யமுடியும்?

நாடகத்திலே நடிக்கும் ராஜபார்ட், வேஷம்கலைந்து, வெறும் நபராகத் தூங்கினாலும், சிற்சில இரவுகளில ராஜபார்ட்டாக நடித்துக் காட்டும் நிலைமை ஏற படுவது இயற்கைக்கு மாறானதல்லவே! அதேபோல் நித்திரையிலே, சர்வாதிகாரம் செய்கிறார சியாங், பழக்க வாசனையால்! மறப்போம்! மகிழ்வோம்!

## வாழ்கைச் செலவு குறைய வழி

### சொல்லளவில் நிற்பதில் பயன் விளைந்து விடாது

நாட்டிலே பொருள்களின் விலைவாசிகள் பதின் மடங்கு உயர்ந்து. ஏழை மக்கள் வாழ்வதா? சாவதா? என்னும் நிலைக்காளாகி விட்டனா. பதிவுக்கு வராத பட்டினிச்சாவுகள பலஅன்றாடம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. பசியால் போதிய அளவு உணவின்மையால், தக்க போஷாப்படைய உணவின்மையால், அன்றாடம் சிறுகச்சிறுக உயிர் விட்டுக்கொண்டிருப்போர் தொகை ஏராளம இந்த நிலையைப்போக்க, மாகாண மத்தியஅரசாங்கங்கள்இதுவரை எந்தக்கவலையும் படவில்லை என்றாலும், இப்போது இது பற்றிப் பேசத் தொடங்கியிருக்கின்றன.

டாலர் பிரதேச வெளி நாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கம் முடிவு செய்து, நிறுத்தப்படவிருக்கும் முதல்பொருளாக அரசாங்கம் பொறுக்கியிருப்பது அரிசியைத்தான். மேலும் தாய்லந்தி(சீயம)லிருந்து இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்த அரிசியும், பிரிட்டனுக்கும் தாய்லந்திற்கும் ஸ்டர்லிங் நாணயமாற்று விஷயத்தினால்ஏற்பட்ட தகரார் காரணமாக இனி நிறுத்தப்படும் எனத்தெரிகிறது. அரிசி நிறுத்தப்படுவதால் அதிகமாகப் பாதிக்கப்படும நாடு தென இந்தியாவே யாகும். வட இந்தியர்களுக்கு அரிசி பற்றிய கவலையில்லை. அதனால்தான் முதலில நிறுத்தப்பட வேண்டிய பொருளாக அரிசி தேர்ந்தெடுக்கப்பட்டது போலும்!

இந்நிலையில், நாட்டுப்பஞ்சத்தைப் போக்க, இந்திய நிதியமைச்சர் புதுடில்லி உணவு மாநாட்டில் வழி கூறியுள்ளார்:- "உணவுப்பொருள்களின் விலை குறைந்தால் பிற விலைவாசிகள் குறைந்துவிடும். சாகுபடிச் செலவு, விநியோகசெலவு முதலியவை குறைவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றுநிதியமைச்சர் கூறுகிறார்.

உண்மையில் பஞ்சத்தைப்போக்க வேண்டுமென்றால், உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்கள் பல உள, செய்வார்களா செயலில்?

## அன்று சொன்னது இன்றுதான் புரிந்தது

தமிழ் மொழியில் சில எழுத்துக்கள் அவசியமில்லாதவை என்றும், இப்போதுள்ள உச்சரிப்புக் கெடாமலே, சில எழுத்துக்களைத் தமிழில் குறைத்துவிட முடியும் என்றும் திராவிடர்கள் நெடுங்காலத்துக்கு முன்னரே எடுத்துக் காட்டி, அவற்றைப் பயன் படுத்தியும் காட்டி வந்துள்ளோம். அப்போதெல்லாம் நாம் கூறியதன் அவசியத்தைக் காங்கிரஸ் காரர்கள உணரவில்லை. இப்போது எழுத்துக்கள் மாற்றம அவசியம என்பதை விளம்பரத்துறை அமைச்சர் உணர்ந்திருக்கிறார். அண்மையில் ஒரு கூட்டத்தில் தமிழ் எழுத்து மாறுதலின் அவசியத்தை வற்புறுத்திப் பேசியுள்ளார். பேசிப் பேசிப் பயனற்றுப் போகும் காங்கிரஸ்காரர்கள். இப்படியெல்லாம் ஜம்பமாகப் பேசுவதைவிட்டு, செயலில் இறங்க வேண்டுகிறோம்

சான்றாக, இதுவரை திராவிடர்கள் நூல்கள், பத்திரிகைகள் முதலியவற்றில் கையாண்டு வந்த திருத்தங்களை மட்டில் கையாளுவதென்றால், டைப் ரைட்டிங், லினோ டைப் முதலியவைகளில் பல எழுத்துக்களைக் குறைத்து விடலாம். அச்சில 128 எழுத்துக்களை மட்டும வைத்துக் கொண்டு எக் குறையுமின்றி வேலை செய்யலாம்.

துவக்கப் பள்ளிக்கூட நூல்களையே, சரிவரவையே இதற்கேற்ப மாற்றியமைத்து விட்டால், புதுமுறைத் தமிழ் வழக்கத்தில வந்து விடும். நாளடைவில் இலக்கியங்களையும் இம்மொழியில் கொண்டு வந்துவிடலாம். அரசாங்கம் உடனே நடவடிக்கையில் இறங்குமா?

## இனி நடப்பவை

கோவை:—கோவை நகரத் திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுவின் கூட்டம் 16-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு நகர திராவிடர் கட்டிடத்தில் நடைபெறும். செயற்குழுவினரனைவரும் தவறாது வரும்படித் தோழர் வெ. கிருட்டிணமூர்த்தி (வி.உறுப்பினர்) வேண்டுகிறார்.

* * *

விருதுநகர்— இந் நகர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா 16—10—49—ஞாயிறு மாலை 7-மணிக்கு அஞ்சல் நிலைய மைதானத்தில் நடைபெறும். அவ்வமயம விருது நகர் மன்றத் துணைத் தலைவர், தோழியர் உ. இராஜமமாள் தலைமையில தோழர்கள என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எஸ். உத்தண்டன், ஏ. பி. இரத்தினம் ஆகியோர் சொற்பெருக காற்றுவர். எனத் தோழர். க. இராமசாமி (அமைப்பாளர்) அறிவிக்கிறார்.

* * *

உடுமலைப்பேட்டை:—உடுமலை திராவிட முன்னேற்றக் கழக ஆரமப விழா 18-10-49 செவ்வாய் மாலை 6 மணிக்கு, இந்நகர் குட்டையில் நடைபெறும. தோழா சி. என். அண்ணாத்துரை, பெத தாமபாளையம் பழனிசசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆகியோர சொறபொழிவாற்றுவா.

* * *

முசிறி—முசிறி வட்டத் திராவிட முனனேற்றக் கழகம் ஆரமபிக்க வேண்டியிருப்பதால, இவ் வட்டத்திலுள்ள இயககத தோழர்கள அனைவரும் 16—10—49 காலை 8-மணிக்கு முசிறியில் வந்து கூடுமபடியும, அதறகுள் எல்லா கிராமஙகளிலும் கிளைக கழகஙகள் நிறுவுமபடியும தோழர்கள் பொசு. மணி, மூ. சேசாசலம், எஸ். பி. சீனிவாசன், என். எஸ். கந்தசாமி ஆகியோர் கேட்டுக் கொள்கிறார்கள்.

---

## கழக நடவடிக்கைகள்

கோவை நகரக்கிளை 2—10—49 ஞாயிறு காலை 10 மணிக்குக கழகக கட்டிடததில் தோழர் ஏ. பொன்னுசாமி அவர்கள தலைமையில செயற்குழுக கூட்டம் நடைபெற்றது. அதுபோது இரண்டு தீர்மானஙகள் நிறைவேறறப்பட்டன. (1) 16—10—49 துவககவிழா கூட்டததிறகு வேண்டிய ஏறபாடுகளைச செய்ய, தோழர் கோவை, செழியன் அவர்களை இககூட்டம செயலாளராக நியமிக்கிறது. (2) கீழ்ககண்டவர்களைக கொண்ட துணைககுழு நியமிக்கப்பட்டது. (i) ஏ. ஏ. லததீப் (ii) வெ. கிருஷ்ணமூர்த்தி (iii) கனகரத்தினம். பின கூட்டம இனிது கலைந்தது. என விளமபர உறுப்பினர் தோழர் வெ. கிருட்டிணமூர்த்தி வரைகிறார்.

* * *

விருதுநகர் நகரக்கிளை—5-10-49 புதன காலை இந்நகர் கட்டையாபுரத்தில தோழர்கள்:—கணபதி, குருசாமி, சுப்பையா, பாலசசாம், தஙகப்பன ஆகியோர் முயற்சியாலும, இந்நகர் மெயின் பஜாரில தோழர்கள பாலசாமி ஐ. மாணிககம, எம. தஙகப்பன், கே. தஙகமுத்து, ரத்தினம் ஆகியோர முயற்சியாலும இரு தி. மு. கழகக் கொடிகள ஏற்றுவிககப்பட்டன. எனத் தோழா ஏ. வி. பி. ஆசைததமபி அறிவிககிறார்.

* * *

நெடுமபலம் சிறறூர்க கிளை:—2-10-49 ஞாயிறன்று இவ்வூர் செல்வம தேநீர் நிலையததிறகு எதிரிலுள்ளத திடலில் தி. மு. கழகச செயலாளர் தோழர் டி எஸ். கலயாணம அவர்களால் திராவிட முனனேறறக கழகக் கொடிஉயர்ததப்பட்டு, சிறுவர்களுககுத தின்பண்டஙகள வழஙகப்பட்டது.எனத தோழர் என். எஸ். குஞ்சிதபாதம

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

### வ. ஆ. மாவட்டம்—தற்காலிக மாவட்டக்கிளை.

திருவத்திபுரம், அக். 9—

இன்று மாலை 3 மணிக்கு திருவத்திபுரம் தபாலாபீஸ் தெருவிற கெதிரில் உள்ள இல்லத்தில் வட ஆற்காடு மாவட்டத் திராவிடர் கழகத்தின்செயற்குழு, தலைவர்தோழர் சி.வே.சுப்பராயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் 33 அஙகத்தினர்கள வந்திருந்தனர். அவ்வமயம் வரவு செலவுக கணக்குப் படிக்கப்பட்டு, ஒருமுகமாக ஒத்துக்கொள்ளப்பட்டது. பின்பு 'நமமுடைய மாவட்டததிராவிடர் கழகததை, "வ. ஆ. மா. திராவிட முன்னேற்றக் கழகம்—தற்காலிகக் கிளை' என மாற்றி அமைக்க இக் கூட்டம தீர்மாணிக்கிறது" என்ற தீர்மானம கொண்டுவரப்பட்டது. இதைச சில தோழர்கள் எதிர்த்தனர். இது குறித்து பலத்த விவாதம நடைபெறறது. இறுதியாக, வாணியமபாடித் தோழர் சி. சோவிந்தராசன், (திருவாரூர் தி. க. மாநாட்டுத தலைவர்) வேலூர் ஈ. திருநாவுககரசு, ஜோலார் பேட்டை பார்த்தசாரதி (திருச்சி தி. க. மாநாட்டுததலைவர்) ஆகிய மூவர் உள்ளிட்ட 13 தோழாகள் டி தீர்மானத்திற்கு மாறுபட்டக கருத்துடன் வெளியேறினர். பின்னர் கீழ்ககண்ட அஙகத்தினர்கள் அத்தீர்மானத்தை ஆதரிகக, ஒருமுகமாக நிறைவேறியது.

தோழர்கள்:—திருவத்திபுரம் சி. வே. சுப்ப்ராயன், கா. கோவிந்தன், மா. நா. இராசமாணிககம, வேலூர் கோ. கிருஷ்ணசாமி, தேனூர் என் சக்கரவர்த்தி, சித்தாத்தூர் எம். பெரியசாமி, ஆரணி சி. ஜெயராமன், அரக்கோணம் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, வந்தவாசி வி. டி. அண்ணாமலை, கே. ஏ. வடிவேலு. பூபால், சோர்ப்பநந்தல் எம். கே. குருசாமி, வேலூர் சி. பி. சிற்றரசு, முல்லைக்கொமமை எம. பி. வடிவேலு, போளூர் சுப்பிரமணியம், கோ. கிருஷ்ணசாமி, சேத்துப்பட்டு ஏ. கண்ணன், சா. கோவிந்தன், ஜோலார் பேட்டை வையாபுரி, வேலூர் மா. பா. சாரதி. கடிதம் மூலமாக தோழர்கள் நாட்டாம் பள்ளி எஸ். கந்தசாமி, திருப்பத்தூர். வி, எம். இராசமாணிக்கம, ஆரணி கே. பி. சுந்தரம, தண்டாரமபட்டு ஆர். நாமதேவ் ஆகியோர் டி தீர்மானத்தை ஆதரித்திருந்தனர்.

பின்பு கீழ்க்கண்ட செயற்குழுவினர்கள தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர்.

செயலாளர்:—சி. வே. சுப்பராயன், துணைசெயலாளர்கள்:—கே. கோவிந்தன்; சி. ஜெயராமன், விளமபர உறுப்பினர்:—மா. நா. இராசமாணிக்கம்.

மாவட்ட முன்னேற்றக்கழகம் அமைந்து விட்டதால் கிளைக்கழகஙகள் அமைத்து, அஙகத்தினர்கள் சேர்ப்பதறகான ரசீது புத்தகஙகள் செயலாளருக்கே அனுப்பிவைக்கும்படித் தலைமைக கழகத்தைக் கேட்டுககொண்டும, நாட்டரம பள்ளித் தோழர் எஸ். கந்தசாமி அவர்கள் விருப்பப்படி வ. ஆ. மா. தி. மு. கழக மாநாட்டை நாட்டரமபள்ளியிலேயே நடத்த அவருக்கு இக்குழு அனுமதியளிக்கிறதெனறும், தீர்மானஙகள நிறைவேற்றப்பட்டன.

பிறகு செயலாளர் நன்றி கூற லுடன் கூட்டம் இனிது கலைந்தது. எனத்தோழர் மா. நா. இராசமாணிக்கம எழுதுகிறார்.

* * *

### திருச்சி மலைக்கோட்டை—கிளை

திருச்சி, அக. 2—

திருச்சி மலைககோட்டை திராவிடர் கழகப்பொது அஙகத்தினர்கள் கூட்டம் தோழர் எல். மாணிக்கம் அவர்கள் இல்லத்தில், தோழர் டி. டி. சிவபுண்ணியம தலைமையில் நடைபெற்றது. மலைக்கோட்டைத் திராவிடர் கழகம் என்பதை, "திராவிட முன்னேற்றக் கழகம்—மலைக்கோட்டை கிளை' எனமாற்றி அமைப்பதாகத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கீழ்க்காணும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:—என். இராஜாத்தினம், துணைச்செயலாளர்:—எல். மாணிக்கம், பொருள் உறுப்பினர்:—கே. ராஜு, விளம்பர உறுப்பினர்:—டி. டி. சிவபுண்ணியம். ஏனைய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மேலும் சில தீர்மானஙகள் நிறைவேற்றப் பட்டுக்கூட்டம் முடிவுற்றது. எனத் தோழர் என். இராஜாத்தினம் (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

### தியாகதுருக்கம்—கிளை

தியாகதுருக்கம், அக். 5—

தென்னாற்காடு மாவட்டம், தியாக துருக்கம திராவிட முன்னேறறக்கழக அமைப்புக்கூட்டம் 4—10—49ல் கழகக் கட்டிடத்தில் தோழர். பொ. இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழகம் கலைக்கப்பட்டுத் திராவிட முன்னேற்றக்கழகம் நிறுவப்பட்டுக் கீழ்க் கண்டவாறு செயறகுழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- மு. ரெகுராமன், துணைச்செயலாளர்- பொ. ராமகிருட்டிணன், நிதி உறுப்பினர்- கோ. இராமாநுசம், விளமபர உறுப்பினர்- இரா. இராசகோபாலன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:— அ. வீராகவன், பெ. இரத்தினம், அ. பழனிவேலன், கோ. கருப்பையா. எனத் தோழர் பொ. இராமகிருட்டிணன் (துணைச செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

### திருக்காரவாசல்—கிளை

திருககாரவாசல், அக். 4—

திருக்காரவாசல் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கே. சுப்பிரமணியம் அவர்கள் மிதிவண்டி நிலையத்தில், 28-9-49-மாலை 6-மணிககு, தோழர் அ. சிஙகாரவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் இவ்வூர் திராவிடர் கழகம கலைக்கப்பட்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் அமைககப்பட்டது. புதிய செயற்குழுவினராகக், கீழ்க்கண்டவர்கள தற்காலிகமாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

செயலாளர்- அ. சிஙகாரவேல், துணைச்செயலாளர்- ஏ. பெருமாள், பொருள் உறுப்பினர்- வே. இராசமாணிககம், விளம்பர உறுபிப்னர்- வீ. சு. இரா. மாணிக்கம். ஏனைய செயற்குழுவினர்- கோ. வெஙகட்ராமன், வீ. சு. இரா. கோவிந்தசாமி, சி. முருகையன், கே. சுப்பிரமணியம், மு. சி. கிருட்டிணசாமி, ப. சிவாநந்தம், கோ. சண்முகசுந்தரம, சோ. சாமிநாதன், கை. தவுசன். எனத் தோழர் வீ. சு. இரா. மாணிக்கம் (விளமபர உறுப்பினர்) வரைகிறார்.

---

### புதுமைப் படிப்பகத் திறப்புவிழா

சிஙகாநல்லூர், செப். 30—

இவ்வூரில் 30-9-49 அன்று தோழா எஸ். எஸ். ராஜு அவர்கள் தலைமையில் "புதுமைப் படிப்பகம்" என்னும் பெயருடைய ஒரு படிப்பகம் திறககப்பட்டது. தோழர்கள் எஸ். அண்ணாசசாமி, ஏ. சி. ஆறுமுகம், எஸ். என். சிவநாதன், எஸ். பி. பழனிச்சாமி ஆகியோர் பேசினர். 5 பேர்கொண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுககப் பட்டு செயலாளர் நன்றிகூறக் கூட்டம இனிது முடிந்ததெனத் தோழா சிவநாதன் (செயலாளர்) வரைகிறார்.

### திராவிட மறுமலர்ச்சி மன்றம்

மதுரை, அச். 2—

இம் மன்ற செயற்குழு உறுப்பினர்களின் கூட்டம் இனறு தோழர் துரைராஜ் தலைமையில் கூடிக், கீழ்க்கண்ட தீர்மானஙகளை நிறைவேற்றியது.

தீர்மானஙகள்:— பெரியார் ஈ. வெ ரா அவர்களின் போக்கு ஜனநாயகத்திறகும, இயக்க நலனுக்கும் கேடு பயப்பதாயிருப்பதால், அவரது தலைமையிலிருந்து நீஙகி 17-9-49-ல் சென்னையில் திராவிடர் கழக மத்திய நிர்வாக உறுப்பினர்கள் கூடி செய்த முடிவை ஏற்று, தி. கழகத்திலிருந்து நீஙகி, தி. மு. கழகத்தோடு ஒத்துழைப்பது.

2. திராவிடமுன்னேற்றக் கழ்கத் துவக்க விழாவை 16-10-49-ல் நடத்துவதென்றும், அதறகான செலவை வசூலிப்பதெனறும தீர்மானிக்கிறது. எனத் தோழர் பொ. தஙகையா (செயலாளர்) எழுதுகிறார்.

---

### ஆவடித் தொழிலாளர் பொதுக்கூட்டம்

ஆவடி, அச். 8—

ஆவடி எம். இ. எஸ. தொழிலாளர்கள்—சிவிலியன் தொழிலாளர்கள சஙகத்தின் சார்பாகப் பொதுக் கூட்டம் ஒன்று நேற்று மாலை 6 மணிககு ஆவடியிலுள்ள நேரு மைதானத்தில், சஙகப்பொதுக காரியதரிசி தலைமையில் நடைபெறறது.

ஆவடித்தொழிலாளாகளுக்குள்ள குறைபாடுகளைப்பற்றி விளக்கி விட்டு, ஆட்குறைப்புத் திட்டத்தைக் கண்டித்துத் தலைவர் அவர்கள் தன் முன்னுரையில் கூறினார். அவரை அடுததுத் தொழிலாளர் தோழர் ஒருவர் தொழிலாளிகளின் குறைகளை விளககமாக எடுத்துக கூறினார்.

தொழிலாளர்களின் நலன்கள் இன்றைய அரசாஙகத்தின் நடவடிக்கைகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது பற்றியும, ஏன் பாதிக்கப் படுகின்றன என்பது பற்றியும், அதை நிர்வததிகக அரசாஙகம எப்படித தன் திட்டஙகளை மாற்றிக்கொள்ள வேண்டும என்பது பற்றியும் தோழர்கள் என். ஜீவரத்தினம, இரா. நெடுஞ்செழியன் ஆகிய இருவரும பேசினார்கள். இறுதியாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு, நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.(ஒ—ர்)

### ஆசிரியர்கள் உரிமைக்கு மாணவர்கள் போராட்டம்

சேலம், அக். 9—

தலைமை ஆசிரியரும், ஏனைய ஆசிரியர்களும கமிஷனர் உத்தரவின்றிப் பொதுக் கூட்டங்களில் பேசக்கூடாது என்று, 14-3-49 முதல் ஓர் தடை உத்தரவு முனிசிபல் கமிஷனரால போடபபட்டுள்ளது. இவ் வுத்திரவால ஆசிரியாகளது பேச்சுரிமையும், மனிதத் தன்மையும் பறிக்கப் பட்டு அவர்களுக்கும் தமககும் இழிவையும் அவமானத்தையும் ஏறபடுத்துகின்றது என்று கருத அந்தத் தடையுத்தரவை ரதது செய்யவேண்டுமென்று, 12-10-49 புதனன்று "கல்லூரி நிறுத்தம்" செயது, தமது கண்டனத்தை நகரசபையாருக்குத் தெரிவிக்க எண்ணியுள்ளார்கள். (ந நி)

---

### திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

திருவாரூா. அக் 5—

இன்று மாலை 4-30 மணிக்கு இந்நகர் திராவிட மாணவர் கழகததின் செயறகுழுக் கூட்டம, தோழர் இரா கோபாலசாமி தலைமையில் நடைபெறறது அவ்வமயம் திராவிட மாணவர் கழகம் கலைக்கபபட்டு, திராவிட மாணவா முனனேறறக் கழகம அமைக்கப்பட்டது. கீழ்க கண்டவாறு செயறகுழுவினா தோந்தெடுக்கபபட்டனா.

செயலாளா—இரா. தென்னன, துணைசசெயலாளா—ச. ஜேசுதாஸ்; பொருள் உறுப்பினர்—ப. துரைராசு, விளமபர உறுபபினா—இரா. கோபாலசாமி.

ஏனைய செயற்குழு உறுபபினாகள— டி. கே. சஙகரன், இரா. கோவிந்தசாமி, லெ. விசுவலிஙகம, கி. நாராயணசமி, வை தியாகராசன, ச. ஆதமநாதன், மு. க. மொய்தீன் பிசசை, பழனிவேலு, வை சுபபிரமணியன், இரா. உததிராபதி எனத் தோழர் இரா. கோபாலசாமி (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

---

### திருமணம்

சென்னை பெரம்பூர், அக். 2—

இனறு மாலை 4-30 மணிக்கு பெரமபூர் பக்தா தோட்டம புதிய தெருவில், தோழா இரா நெடுஞ்செழியன எம்.ஏ. அவர்கள தலைமையில் தோழர் பா இலட்சுமணன், தோழியா முனியம்மா ஆகியவரின் திருமணம் நடந்தேறியது. இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப் பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர]

---


## 4-வது கடைசி வாரம்

கோவை எடிசனில்,
11—10—49 முதல் 16—10—49 வரை.
K. R. ராமசாமியின்
கிருஷ்ணன் நாடக சபையாரின்

# துளிவிஷம்

(நாடகம்)
(டைரக்டர் A. S. A. சாமி தயாரித்தது)

K. R. ராமசாமி—P. K. சரஸ்வதி
S. A. நடராஜன், M. K. முஸ்தபா, ராஜா,
M. G. தண்டபாணி, K. K. பார்வதிபாய்
ஆகியோர் நடிப்பார்கள்,
16—10—49 ஞாயிறு,
இவ்வூரில் எமது கடைசி நாடகம்.
அடுத்த முகாம்—'ஈரோடு'

K. R. ராமசாமி, உரிமையாளர்.


Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.